# அகத்தூண்டுதல்

## அகத்தூண்டுதலிற்கான தேவை

தேவன் வெளிப்பாட்டை கொடுத்ததற்கான காரணம் அவரை குறித்த அறிவு எல்லாருக்கும் செல்லவேண்டும் என்பதற்காகவே! இது எப்படி சாத்தியமாகும். அது அகத்தூண்டுதல் மூலமாகவே நடக்கிறது. தேவன் ஒரு மனிதனுக்கு வெளிப்படுத்தின வெளிப்பாட்டை எல்லா மனிதனும் அறிந்துகொள்வதற்கு எழுத்தின் வடிவில் வரவேண்டும் என்று கர்த்தர் திட்டமிட்டார். அதுதான் அகத்தூண்டுதலாக இருக்கிறது. இதற்கு தேவனே ஆரம்ப முயற்சி எடுத்திருக்கிறார்.

- வெளிப்பாடு என்கின்ற உபதேசம் தேவனிடத்திலிருந்து மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்டது.
- அகத்தூண்டுதல் என்று உபதேசமானது மனிதனிடத்தில் இருந்து 'ஏடு' அதாவது 'எழுத்திற்கு' கொண்டுவரப்பட்டது.

இந்த அகத்தூண்டுதல் மனிதனுடைய கற்பனையில் வந்ததும் அல்ல; மனிதனுடைய முயற்சியினால் சாத்தியமாகிறதும் அல்ல; ஆனால் தேவன் இதை சாத்தியமாக்கினார். தேவன் மனிதனுக்கு கொடுத்த வெளிப்பாடானது பிழையில்லாமல் மனிதனுக்கு சென்றடையவேண்டும் என்பதற்காக தேவனே இதற்கு முயற்சி எடுத்தார். தேவன் மனிதனுக்கு கொடுத்த வெளிப்பாட்டை எழுத்து வடிவில் கொண்டுவர வேண்டும் என்பதற்காக மனிதனுக்கு அவர் கட்டளை கொடுக்கிறதே பார்க்கிறோம்.

- பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: இதை நினைவுகூரும்பொருட்டு, நீ ஒரு புஸ்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவி கேட்கும்படி வாசி. அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார் (யாத் 17:14).
- மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான். அப்பொழுது ஜனங்களெல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து... (யாத் 24:3,4).
- பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த வார்த்தைகளை நீ எழுது (யாத் 34:27).
- இப்பொழுது நீங்கள் இந்தப் பாட்டை எழுதிக்கொண்டு, இதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்து, இந்தப்பாட்டு எனக்குச் சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும்படி இதை அவர்கள் வாயில் வழங்கப்பண்ணுங்கள் (உபா 31:19). மோசே இந்த பாட்டை எழுதி லேவியர்களிடத்திலே கொடுத்து நீங்கள் இந்த நியாயப்பிரமாண புஸ்தகத்தை எடுத்து, அதை உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியின் பக்கத்திலே வையுங்கள்; அங்கே அது உனக்கு விரோதமான சாட்சியாயிருக்கும் ( உபா 31:24–26).

பின்நாட்களில் இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உடன்படிக்கையின் புஸ்தகமாக கருதப்பட்டது (2 இராஜா 23:2,21; 2 நாளா 34:14).

- ❖ யோசுவாவின் எழுத்துக்களும் அந்த நியாயப்பிரமாண புஸ்தகத்திலே சேர்க்கப்பட்டன (யோசுவா 24:25,26 – அந்தப்படி யோசுவா அந்நாளில் சீகேமிலே ஜனங்களோடே உடன்படிக்கைபண்ணி, அவர்களுக்கு அதைப் பிரமாணமும்

நியாயமுமாக ஏற்படுத்தினான். இந்த வார்த்தைகளை யோசுவா தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதி...).

- தீர்க்கதரிசிகளின் காலத்திலும்கூட இஸ்ரவேல் தேசத்தை ஆண்ட ராஜாக்களுடைய நடபடிகைகளையெல்லாம் தீர்க்கதரிசிகளிடத்தில் கர்த்தர் எழுத சொல்லி கட்டளையைக் கொடுப்பதை பார்க்கமுடியும் (1 நாளாகமம் 29:29,30 – ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலின் பிரபந்தத்திலும், தீர்க்கதரிசியாகிய நாத்தானின் பிரபந்தத்திலும், ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தின் பிரபந்தத்திலும் எழுதியிருக்கிறது).
- இப்பொழுது நீ போய், இது பிற்காலத்துக்கு என்றென்றைக்கும் இருக்கும்படி, இதை அவர்களுக்கு முன்பாக ஒரு பலகையில் எழுதி, ஒரு புஸ்தகத்தில் வரை (ஏசாயா 30:8). இந்த வசனத்தில் தேவன் ஏசாயாவினிடத்தில் பிற்காலத்தில் என்றென்றைக்கும் இந்த வார்த்தைகள் இருக்கவேண்டும் என்கின்ற நோக்கத்தோடு எழுதச்சொன்னார். இதைப்போல எரேமியா (30:; 36:2–4; 27–32), ஆபகூக் (2:2) ஆகிய தீர்க்கதரிசிகளிடத்திலும் கர்த்தர் எழுதச்சொல்கிறதை நாம் வாசிக்கமுடியும்.

ஆக, தேவன் நம்மீது அன்பு வைத்து தேவனுடைய வார்த்தையை நமக்கு வெளிப்படுத்தி அதை பாதுகாத்து அதன் மூலமாக நாம் தேவனை அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக எழுத்து வடிவில் கொடுத்திருக்கிறார்; இது அவருடைய அநாதி தீர்மானமாக இருக்கிறது.

## வேத குறிப்புகள்

வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ 3:16,17).

தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:21).

## அகத்தூண்டுதல் குறித்ததான சில முக்கியமான விவரங்கள்

1. **அகத்தூண்டுதலுக்கான மூல ஆதாரம்**: 'வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது' என்பதற்கு 'தியோப்நியூஸ்டோஸ்' என்ற கிரேக்க வார்த்தையானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு 'மூச்சு விடுதல்' என்பது பொருளாகும். பரிசுத்த வேதாகமத்தில் இந்த இடத்தில் மட்டுமே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை செய்வினை சொல்லாக பயன்படுத்தாமல் செயல்பாட்டு வினைச்சொல்லாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் தேவன் மூச்சு விடுகிறார் என்று நாம் பொருள்கொண்டால் அது நம்மை தவறான வழிக்கு நடத்திச்செல்லும். 'செயல்பாட்டு வினைச்சொல்லின்படி' பரிசுத்த வேதாகமம் 'தேவனுடைய மூச்சுவிடுதலின் விளைப்பொருள்' என்று சொல்லலாம். ஆக இதனுடைய மூல ஆதாரம் தேவனாக இருக்கிறார்.
2. **அகத்தூண்டுதலின் அளவு:** 'வேதவாக்கியங்களெல்லாம்' என்று சொல்வதினால் சில வசனங்கள் மட்டும் என்றோ, அல்லது வேதாகமத்தின் ஒரு பகுதி மட்டும் என்றோ இல்லாமல் முழு வேதாகமும் அவருடைய அகத்தூண்டுதலினால்

கொடுக்கப்பட்டிருக்கிறது. 'வேதவாக்கியங்கள்' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 51 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

- இது சில இடங்களில் முழு பழைய ஏற்பாட்டையும் குறிப்பிடுகிறது என்பதை நாம் காணமுடிகிறது (லூக்கா 24:44,45 – மோசேயின் நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம், சங்கீதம் – இவைகள் முழு பழைய ஏற்பாட்டை குறிக்கிறது. அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து ...)
- சில இடங்களில் இந்த வேதவாக்கியம் என்பது பழைய ஏற்பாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் சுட்டிக் காண்பிக்கிறது (லூக்கா 4:21 – அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று; இதற்கு முன்பு உள்ள வசனங்கள் மூலம் பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள அந்த வார்த்தைகளை சுட்டிக்காண்பித்து குறிப்பிடுகிறதை காணலாம்)
- இந்த வேதவாக்கியம் என்ற சொல்லானது சில இடங்களில் புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரு பகுதியை சுட்டிக்காண்பிக்கிறது (1 தீமோ 5:18 – பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது 'வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே' என்பது மத்தேயு 10:10ல் குறிப்பிடப்பட்டுள்ளது)
- மட்டுமல்ல புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளை ஒன்றாக சேர்த்து வேதவாக்கியம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது (2 பேதுரு 3:15,16 – நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான். எல்லா நிருபங்களிலும் இவைகளைக்குறித்துப் பேசியிருக்கிறான்; அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். ஆக, 'பவுலின் எல்லா நிருபங்களையும் வேதவாக்கியங்கள்' என்று பேதுரு குறிப்பிடுகிறான்).

3. **அகத்தூண்டுதலின் நோக்கம்:** தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ 3:17).
    - பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியோடு இருந்து பாவத்திற்கு விரோதமாக போராடுவது மாத்திரமல்ல; அவன் பாவம் செய்யும்போது கண்டித்து உணர்த்தி, மீண்டும் அவன் கிறிஸ்துவின் சாயலாக மாறுவதற்கு வைராக்கிய வாஞ்சையாக நம்மோடுகூட செயல்படுகிறவராக காணப்படுகிறார்.
    - மட்டுமல்ல வேதவசனமானது பாவம் செய்து கர்த்தரை விட்டு தூரமாய் போனவர்களை மீண்டும் சீர்திருத்தி அவரிடத்தில் கொண்டுவர கூடியதாகவும் இருக்கிறது.
    - புதிதாய் இரட்சிக்கப்பட்டு வருகிறவர்களை நீதியின் பாதையில் நடத்த கூடியதாகவும் காணப்படுகிறது.

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார் (எபே 2:10).

4. **அகத்தூண்டுதலின் முறை:** தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேதுரு 1:21). இங்கு 'ஏவப்பட்டு' என்று குறிப்பிடப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது அப் 27:15லும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கப்பல் அதில் (காற்றில்) அகப்பட்டுக்கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப்போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டுபோகப்பட்டோம் (அப் 27:15). கப்பலில் அனுபவம் வாய்ந்தவர்கள், மாலுமி இவர்கள் எல்லாரும் இருந்தபோதும் கூட காற்றுக்கு எதிர்த்துப்போகக்கூடாதபடியினால் காற்றின் போக்கில் அந்த கப்பலானது சென்றது என்று சொல்லி பார்க்கிறோம். அதுபோல வேத வசனத்தை எழுதினவர்கள் மனிதர்களாக இருந்தாலும் அவர்கள் சுயமாக எழுதாமல் பரிசுத்த ஆவியானவருடைய ஏவுதலால் எழுதினார்கள் என்பதற்கு இந்த இரண்டு பகுதிகளிலேயும் ஒரே கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை வைத்து அறிந்துகொள்ளமுடியும்.

பரிசுத்த ஆவியானவரை கொண்டு இந்த வேதவசனம் மனிதர்களால் எழுதப்பட்டிருந்தாலும் அந்த எழுத்தாளர்களின் அச்சிடு வேதாகமத்திற்கு பின்பாக இருந்தது என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

i. இந்த பரிசுத்த வேதாகமத்தை எழுதும்போது அநேக விஷயங்களை அவர்கள் நேரடியாக தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள். உ.ம். இஸ்ரவேல் ஜனங்கள் பெற்றுக்கொண்ட பத்து கட்டளைகள். அப்பொழுது தேவனுடைய விரலினால் எழுதியிருந்த இரண்டு கற்பலகைகளைக் கர்த்தர் என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்; சபை கூடியிருந்த நாளில் கர்த்தர்மலையிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களுடனே பேசின வார்த்தைகளின்படியே அவைகளில் எழுதியிருந்தது (உபா 9:10). அதுபோலவே சிருஷ்டிப்பு காரியங்களை குறித்தும் தேவன் நேரடியாக மோசேயினிடத்தில் பேசியிருக்கவேண்டும். ஆனால் இதையே வேதாகமம் முழுமைக்கும் நாம் சொல்லமுடியாது.

ii. ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:2,3). 'ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும்' என்ற பதமானது லூக்கா பல இடங்களுக்குச் சென்று பல நபர்களை சந்தித்து அவர்களோடுகூட பேசி அநேக காரியங்களை ஒன்றுசேர்த்து திட்டமாக அதாவது ஒழுங்காக இந்த அப்போஸ்தல நடபடிகள் நிருபத்தை எழுதினார் என்று பார்க்கிறோம். ஆக பரிசுத்த வேதாகமத்தை எழுதும்போது அந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் சில சுயாதீனங்களை கொடுத்தார்.

iii. இந்த எழுத்தாளர்கள் மற்ற உலகத்தில் உள்ள எழுத்தாளர்களுடைய எழுத்துக்களையும் மேற்கோள்காட்டி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களில் ஒருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான் (தீத்து 1:12).

iv. எழுத்தாளர்கள் தங்களுடைய தனிப்பட்ட அனுபவங்களை எழுதுவதற்கு கர்த்தர் அனுமதித்திருக்கிறார். பவுல் அனேக இடங்களில் தன்னுடைய இரட்சிக்கப்பட்ட அனுபவத்தை குறிப்பிடுவதை நாம் காணமுடியும்.

v. அது மட்டுமல்ல ஒரு எழுத்தாளர் மற்ற எழுத்தாளர்களுடைய எழுத்துக்களை மேற்கோள் காட்டுவதை அநேக இடங்களில் நாம் காணமுடியும்.

vi. வேதாகமத்தை எழுதின எழுத்தாளர்களுடைய பின்னணி, அவர்கள் செய்த வேலை, அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறை, அவர்களுடைய ஆள்தத்துவம், அவளுடைய உணர்வுகள், அவர்களுடைய அனுபவங்கள் இவையெல்லாம் இந்த புத்தகத்தில் அடங்கியிருக்கிறது என்பதை நாம் நிச்சயமாக மறுக்கமுடியாது. உதாரணமாக: வேதத்திலுள்ள ஒரு சம்பவத்தைப் பார்க்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஒரு குஷ்டரோகி வருகிறான். லூக்கா அவனை 'குஷ்டரோகத்தால் நிறைந்த ஒரு மனுஷன்' என்று சொல்லுகிறார். ஆனால் மற்ற எழுத்தாளர்கள் 'குஷ்டரோகி' என்று மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார்கள். லூக்கா ஒரு மருத்துவராக இருப்பதினால் அவர் பார்க்கிற கோணம் வித்தியாசமாக இருக்கிறது.

ஆக, மனித எழுத்தாளர்களுடைய பங்கு இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக அந்த எழுத்துக்களை ஆளுகை செய்தவர் பரிசுத்த ஆவியானவர். அதனால்தான் பிழையற்ற பரிசுத்த வேதாகமம் நம்முடைய கரங்களில் இன்றைக்கு இருக்கிறது.

## அகத்தூண்டுதலின் வரையறை

வேதாகமத்தை எழுதிய மனித எழுத்தாளர்கள் தங்கள் சுய இயல்புகளை அல்லது பண்புகளை பயன்படுத்தி கர்த்தருடைய மேற்பார்வையில் அல்லது கண்காணிப்பில் அல்லது ஆளுகையில் அவர் மனிதனுக்கு அருளிய தமது வெளிப்பாட்டை உருவாக்கி மூலகையேட்டில் பிழையில்லாமல் பதித்திருக்கிறார்கள். இந்த மூலகையேடு என்பது முதல் பிரதி ஆகும். இந்த கர்த்தருடைய அகத்தூண்டுதலை அதற்கு மட்டுமே உரித்தாகமுடியும்.

## அகத்தூண்டுதல் உபதேசத்தை குறித்த சில தவறான கருத்துக்கள்

1. அநேகர் சில தவறான கருத்துக்களை கொண்டு வருகிறார்கள். இது மனிதர்கள் தங்களுடைய ஞானத்தை கொண்டும், தங்களுடைய திறமைகளை கொண்டும் எழுதினார்கள்; இது தேவன் கொடுத்த புத்தகம் அல்ல என்று சொல்லி வேதபுத்தகத்தில் உள்ள தெய்வீக பங்கை அதிலிருந்து எடுத்துவிடுகிறார்கள் அப்படி எடுத்துவிடும்பொழுது அது சாதாரண மனிதன் எழுதின புத்தகமாக இருக்கும்.
2. சிலர் இந்த வேதபுத்தகத்திலுள்ள மனித பங்கை வெளியே நீக்கி விடுகிறார்கள். இவர்கள் சொல்லும் காரியம் என்னவென்றால் தேவன் சொல்லச்சொல்ல மனிதன் எழுதினான் என்கிறார்கள். ஆக, மனிதனை ஒரு இயந்திரத்தைப்போல அவர்கள் கருதுகிறார்கள். இந்த இரண்டு கருத்துக்களும் தவறானது; அபாயகரமானது.
3. ஒரு சிலர் வேதாகமத்தின் எந்த பகுதிகள் நம்முடைய விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்புடையதாக இருக்கிறதோ அல்லது எது நமக்கு புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளதோ அவைகள் மாத்திரமே தேவனுடைய அகத்தூண்டுதலினால் அருளப்பட்டிருக்கிறது என்கின்றனர். நாமும் கூட அனேக சமயங்களில் பழைய ஏற்பாட்டை புறக்கணித்து புதிய ஏற்பாட்டிற்கு முக்கியத்துவம் தருகிறோம்.
4. வேறு சிலர் தேவன் தன்னை குறித்து மனிதனுக்கு வெளிப்படுத்தும் போது ஒரு சில கருத்துக்களை மட்டுமே வெளிப்படுத்தினார். ஆனால் மனிதனோ அதோடு கூட சேர்ந்து தன்னுடைய சொந்த வார்த்தைகளை பயன்படுத்தி எழுதியிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகிறவர்கள் வேதாகமத்தில் உள்ள எல்லா வார்த்தைகளுக்கும் அகத்தூண்டுதல் உள்ளது என்பதை பொருத்தவில்லை.

<u>அகத்தூண்டுதல் உபதேசத்தை குறித்த சரியான கருத்து</u>

ஆங்கிலத்தில் 'verbal plenary inspiration' (வெர்பல் பிளேனரி இன்ஸ்பிரேஷன்) என்று அழைக்கிறார்கள். 'வெர்பல்' என்பதற்கு வார்த்தைகள் என்றும், 'பிளேனரி' என்பதற்கு முழுமை என்பதும் அர்த்தம் ஆகும். இவர்களின் கூற்று: வேதாகமம் முழுவதும் தேவனுடைய அகத்தூண்டுதலினால் கிடைக்கப்பெற்றதாகும். இதுவே நாம் விசுவாசிக்கும் சரியான கருத்தாகும்.

1. **ஒவ்வொரு வார்த்தைகளும் தேவனால் அருளப்பட்டவைகள்:**
   - மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்4:4).
   - அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக்கிறோம் (1 கொரி 2:13).
   - கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன் (ஏரேமியா 1:9).
   - நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:8)
2. **வேதாகமத்தில் நீண்ட ஒரு பகுதி குறிப்பிட்ட வார்த்தையின் முக்கியத்துவத்தில் நிற்கிறது.**
   - அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே 'நான் இருக்கிறேன்' என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவான் 8:58). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன இந்த ஒரு வார்த்தையின் நிமித்தமாக அவர் மீது இஸ்ரவேல் ஜனங்கள் கல்லெறியப்பார்க்கிறார்கள். கர்த்தர் மோசேயோடேகூட எரிகிற முட்செடியின் நடுவிலிருந்து 'நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்' என்று கூறினார். இது எத்தனை உண்மை! ஆபிரகாமுக்கு முன்பாகவே இருந்தார்; இப்பொழுதும் இருக்கிறார்; இனிமேலும் இருப்பார்.
   - ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் 'சந்ததி' கிறிஸ்துவே (கலா 3:16). இங்கும் கூட சந்ததி என்கின்ற வார்த்தை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் பார்க்கிறோம் காரணம் அந்த சந்ததி கிறிஸ்து.
3. **முழு வேதாகமமும் தேவனால் அருளப்பட்டிருக்கிறது அதாவது அகத்தூண்டுதலின் விளைபொருளாக இருக்கிறது.**
   - <u>இயேசு கிறிஸ்துவின் சாட்சி:</u> வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத் 5:18). இங்கு நியாயப்பிரமாணம் என்கின்ற வார்த்தையானது முழு பழைய ஏற்பாட்டையும் குறிப்பிடுகிறது. 'வேதவாக்கியமும் தவறாததாயிருக்க' (யோவான் 10:35) என்று சொல்வதின் மூலம் முழு பழைய ஏற்பாடும் தேவனால் அருளப்பட்டது என்பதையும் அது நிறைவேறி தீரும் என்பதையும் நாம் அறிந்துகொள்ளமுடியும்.
   - அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம்

நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார் (லூக்கா 24:44).

- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பின்பு அப்போஸ்தலர்களால் எழுதப்படபோகிற வார்த்தைகளும் தேவனால் அருளப்படும் வார்த்தைகள் என்பதை கிறிஸ்து முன்கூட்டியே அறிவிக்கிறார். இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (யோவான் 16:12,13).
- மட்டுமல்ல ஒரு எழுத்தாளர் மற்ற எழுத்தாளர்களின் எழுத்துக்களை மேற்கோள் காட்டும் போதும் அது தேவனுடைய வார்த்தை என்பதை குறிப்பிடுகிறார்கள்.
    - ❖ பவுலுடைய வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகள் என்பதை பேதுரு குறிப்பிடுகிறார் (2 பேதுரு 3:15,16).
    - ❖ அதுபோல லூக்காவின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகள் என்பதை பவுல் குறிப்பிடுகிறார் (1 தீமோ 5:18=லூக்கா 10:7)
    - ❖ அதுமட்டுமல்ல புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அனேகர் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட காரியங்களை மேற்கோள் காட்டும்போது: தாவீது ஆவியினாலே சொன்னான், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறதாவது என்று மேற்கோள் காட்டி பழைய ஏற்பாடு அனைத்தும் தேவனுடைய அகத்தூண்டுதலினால் கொடுக்கப்பட்டது என்று அறிவிக்கிறார்கள்.

<u>அகத்தூண்டுதலுக்கான நடைமுறை காரியங்கள்</u>

1. ஒருவர் வேதாகமம் தேவனால் அருளப்படவில்லை என்று சொல்வாரானால் அதனுடைய அதிகாரத்தை குறைத்து மதிப்பிடுகிறார். எழுதப்பட்ட வார்த்தையை நாம் புறக்கணித்தோமெனில் மாம்சமாய் வந்த கிறிஸ்துவையும் புறக்கணிக்கிறோம்.
2. தன்னுடைய விசுவாசத்திற்கும் நடைமுறைக்குமான பாதிப்பைகளை அவர் மேற்கொள்வார். பிரசங்கியின் புஸ்தகம் ஒரு தத்துவமாகவும், உன்னதப்பாட்டு ஒரு அன்பின் கதையாகும் இருப்பதினால் இவைகளை கர்த்தர் மனிதனுக்கு கொடுப்பாரா? என்று கேள்விகள் எழலாம். பிரசங்கியில் அனேக நடைமுறை காரியங்களையும், உன்னதப்பாட்டு புத்தகத்தில் நம்முடைய குடும்பத்திற்கு தேவையான அநேக ஆலோசனைகளையும் தேவன் வைத்திருக்கிறார். ஆக, தேவனுடைய அகத்தூண்டுதல் என்கின்ற உபதேசத்தை நாம் மறுக்கும்போது அநேக பாவங்களில் நாம் சிக்கிக்கொள்கிறோம்.
3. தேவனுடைய அகத்தூண்டுதல் என்கின்ற உபதேசத்தை நாம் படிக்கும்போது கிறிஸ்துவின் சாயலில் நாம் வளர்கிறோம்.